இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 357 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 22 – வெள்ளிக்கிழமை 07 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 357 : Thiruvalluvar Year - 2057 - Aadi 22 - Friday 07 August 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## சொந்தமாகவும் யோசிக்காத - சொன்னதையும் செய்யாத

# ‘ரீல்ஸ்’ அரசின் புஸ்வாண பட்ஜெட்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!






**சென்னை, ஆக.7-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், த.வெ.க. அரசின் பட்ஜெட் குறித்து தமது சமூக வலை தளப் பக்கத்தில், “சொந்தமாகவும் யோசிக்காத. சொன்னதையும் செய்யாத ‘ரீல்ஸ்’ அரசின் புஸ்வாண பட்ஜெட்” என்று விமர்சித்துப் பதிவிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**இன்று சட்டமன்றத்தில் வாசிக்கப்பட்ட TNBudget2026 பற்றி Reels CMக்குப் புரியும் மொழியில் சொல்ல வேண்டுமென்றால்,**

**‘Blast Blast’ஆக இருக்கும் என எதிர்பார்த்த மக்களுக்கு, ‘Waste Waste’ எனச் சொல்லும் படிதான் இருக்கு!**

**அதுமட்டுமல்ல, இது Dravidian Model அரசின் திட்டங்களின் Remake Version budget!**

**மக்கள் மொழியில் சொல்ல வேண்டுமென்றால்,**

**விவசாயிகள் பிரச்சினை, மின் கட்டணக் குளறுபடி பிரச்சினை, விலைவாசி உயர்வுப் பிரச்சினை என எதைப் பற்றியும் கவலையின்றி, மாநிலத்திற்குத் தேவையான புதிய தொலை நோக்குத் திட்டங்களையும் அறிவிக்காத பட்ஜெட்!**

**அதுமட்டுமல்ல,**

**ரூ.2,500 மகளிர் உரிமைத் தொகை, வேலையில்லா இளைஞர்களுக்கு ரூ. 4 ஆயிரம், ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர், முழுப் பயிர்க்கடன் தள்ளுபடி, என முக்கிய வாக்குறுதிகள் எதைப் பற்றியும் மூச்சே விடாத பட்ஜெட்!**

**மொத்தத்தில்,**

**சொந்தமாகவும் யோசிக்காத**

**சொன்னதையும் செய்யாத**

**சுரத்தில்லாத புஸ்வாண பட்ஜெட்டாகத்தான் ‘ரீல்ஸ் அரசின்’ முதல் பட்ஜெட் அமைந்திருக்கிறது.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களையெல்லாம் பெயர் மாற்றி அறிவித்திருப்பதைத் தவிர வேறொன்றும் இல்லை!

# இந்த பட்ஜெட் ஒரு மிகப் பெரிய பூஜ்யம்!

## தலைமைச் செயலகத்தில் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஆக. 7-**

**‘டம்மி’ முதல்வரின் த.வெ.க. அரசு, சட்டப்பேரவையில் தாக்கல் செய்த பட்ஜெட் குறித்து தலைமைச் செயலக வளாகத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் “இந்த பட்ஜெட் ஒரு மிகப் பெரிய பூஜ்யம்” என்று கூறினார்.**

தலைமைச் செயலக வளாகத்தில், நேற்று முன்தினம், கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

பத்திரிகை நண்பர்களுக்கு, வணக்கம்.

இன்று, தமிழ்நாடு சட்டபேரவையில், திருத்திய நிதிநிலை அறிக்கையை இந்த அரசு தாக்கல் செய்துள்ளது. இந்த அரசு அமைந்து, கிட்டத்தட்ட 100 நாட்கள் ஆகிவிட்டன. 100 நாட்களில் இந்த அரசின்



பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் நாளான நேற்று முன்தினம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த காட்சி!

மார்க் என்ன என்று யாரைக் கேட்டாலும், பூஜ்ஜியம் என்றுதான் சொல்வார்கள். இந்த பட்ஜெட்டும் இன்றைக்கு ஒரு மிகப்பெரிய பூஜ்ஜியம்.

### எங்களின் ‘திராவிட மாடல்’!

நாங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தோம். எங்கள் தலைவர் சொன்னார். நாங்களும் சட்டசபையில் பேசும்போது சொன்னோம். “நிறைய தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறீர்கள். அதை உடனடியாக, உங்களால் செய்ய முடியாது. ஆனால், எப்போது செய்யப் போகிறீர்கள்? என்று ஒரு ரோடு மேப் கொடுங்கள்” என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தோம்.

இந்த பட்ஜெட்டைப் பார்த்தீர்கள் என்றால், எங்களின் ‘திராவிட மாடல்’ அரசு, எங்களின் தலைவர், கடந்த ஆட்சியில் என்னென்ன திட்டங்கள் எல்லாம் கொண்டு வந்தார்களோ, அதற்கு மேல் ஒரு ஸ்டிக்கரை ஒட்டி இருக்கிறார்கள். ஆட்சிக்கு வரும்போது, ‘மாற்றம்’, ‘மாற்றம்’ என்றார்கள். ‘என்ன மாற்றம்?’ என்று கேட்டீர்கள் என்றால், எல்லாவற்றுக்கும் ‘பெயர் மாற்றம்’ செய்திருக்கிறார்கள்.

பட்ஜெட்டுக்கு முன்பு, பொதுவாக எல்லா முதலமைச்சர்களும், அமைச்சர்களும் அதிகாரிகளை அழைத்துப் பேசுவார்கள். அதே மாதிரி இந்த அரசும் கடந்த 10 நாட்களாக எல்லா அதிகாரிகளையும் அழைத்து ஆலோசனை செய்வது போல், புகைப்படங்கள் எல்லாம் வந்தன.

### எதற்கு ஒரு ஆய்வுக் கூட்டம்?

பெயர் மாற்றம் செய்வதற்கு எதற்கு ஒரு ஆய்வுக் கூட்டம் நடந்தது, அதிகாரிகளுடன் என்ன ஆலோசனை செய்தார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டத்தை அறிவித்துள்ளார். ஆனால், அதுவும் பார்த்தீர்கள் என்றால், தேர்தல் வாக்குறுதியில் சொன்னது போல் அவர்கள் அறிவிக்கவில்லை. தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, அவருடைய வாக்குறுதி என்னவென்றால், தமிழ்நாட்டில் பிறக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும், ‘தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்’ என்று சொன்னார். ஆனால், இன்றைக்கு பட்ஜெட்டில் அரசு மருத்துவமனையில் பிறக்கக் கூடிய குழந்தைகளுக்கு மட்டும் தான், இந்தத் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், பட்ஜெட்டில் எந்தத் திட்டமும், எந்த அறிவிப்பும் இல்லை. அனைத்துத் திட்டங்களும் ‘திராவிட மாடல் ஆட்சி’யில் எங்கள் தலைவர்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்